சொல்லிவிட்டார்கள். அமைச்சர் சொன்னதை ஏற்றுக் கொண்டு நீங்கள் சொன்னதைத் திரும்பப் பெறுகிறீர்களா? இல்லையா? (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கொண்டு வந்த தீர்மானத்தை நீங்கள் வாக்கெடுப்பு நடத்தி முடித்து விட்டீர்கள். அதற்குப் பிறகு அவர் எப்படிப் பேச முடியும்? (கூச்சல்-குழப்பம்).

திரு. துரைமுருகன் : துணைத் தலைவரவர்களே நாங்கள் சொல்வதற்கு எங்களுக்கு சான்ஸ் தராமல் ப்ரூட்டல் மெஜாரிட்டியின் மூலம் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய காரணத்தால் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம். (கூச்சல்-குழப்பம்).

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்தனர்.)

மாண்புமிகு மின்துறை அமைச்சர், திரு. ரகுமான்கான் மீது கொண்டு வந்த உரிமை மீறல் தீர்மானத்தை அவை ஏற்று உரிமைக் குழுவிற்கு அனுப்பப் பெறுகிறது.

8. ஒழுங்குப் பிரச்சினை.

அவையில் 'சவால்கள், எதிர்ச் சவால்கள்' விடுதல்.

திரு. என். சங்கரய்யா : சார் பாயின்ட் ஆப் ஆர்டர். இதற்கு முன்னாலே, 'சவால்கள் விடுவதும், எதிர் சவால்கள் விடுவதும் ஏற்றுக் கொள்ள முடியாது' என்று நீங்களே முன்பு ரூலிங் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் இப்பொழுது அப்படி நடைபெற்றதே, அதைப்பற்றி தங்களுடைய ரூலிங் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, சவால்கள் தேவையில்லை என்றாலும் சில நேரங்களில் தவிர்க்கக் கூட முடியாமல் வந்து விடுகிறது. அதுவுமல்லாமல் இப்போது எழுப்பப்பட்ட பிரச்சினை சவால்கள் கூட அல்ல. உண்மைக்கு மாறான தகவல்களை, தவறு என்று நன்றாகத் தெரிந்தும் கூட, தவறுகளைத் திருத்திக் கொள்ள முன் வராது பிடிவாதம் செய்கிற ஒரே காரணத்தினால் எழுந்ததே தவிர, வேறு பிரச்சினை அல்ல என்பதை மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். பொதுவாக இந்தப் பேரவையில் சவால் விடுவது ஏற்றுக் கொள்ளப்படுவது இல்லை.

திரு. என். சங்கரய்யா : துணைத் தலைவர் அவர்களே, பிரச்சினை என்னவென்றால், சவால்கள் கூடாது என்று சொன்னால் அதை நீக்க வேண்டும். இல்லாவிட்டால் இதை முன்

1981 மார்ச் 6] [திரு. என் சங்கரய்யா]

-தாரணமாக வைத்துக் கொண்டு, இது மாதிரியான சவால்கள் பின்னால் அவையில் எழுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டு விடும் என் பதைத்தான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் சொன்னது போல, இவை சவால்கள் கூட அல்ல. உண்மைக்கு மாறாக எழுந்த விவாதத்தைப் பற்றிய பிரச்சினை. அதனால் இவை அவைக் குறிப்பில் இருக்கலாம்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, நான் அதிகமாக பேச விரும்பவில்லை. ஏனென்றால் பசி வந்தால் பத்தும் பறந்து போய்விடும். இந்தச் சட்டமுன் வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சிவஞானம், திரு. இராசு, திரு. ரமணி ஆகியோர் பல்வேறு கருத்துக்களை, கோவை நகராட்சியைப் பற்றியும், மற்றும் பல நகராட்சிகளைப் பற்றி யும், ஊராட்சிகளைப் பற்றியும் எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள். அவைகளை எல்லாம் கவனத்தில் கொண்டு உடனடி யாக தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரி வித்துக் கொண்டு சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(ஆ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் னுள்ள கேள்வி : "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1981)" ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.